உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 01.07.2026 • மலர் 04 • இதழ்: 181 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 01.07.2026 • Vol : 04 • Issue : 181 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் இறுதிகட்டத்தில் உள்ளது

## அமெரிக்க தூதர் தகவல்



வாஷிங்டன், ஜூலை

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 2வது முறையாக பதவியேற்றார். ஜனாதிபதியாக பதவியேற்றதுமுதல் இந்தியா, சீனா, கடனா உள்பட பல்வேறு நாடுகள் மீது கூடுதல் வரி விதித்தார். குறிப்பாக, இந்திய பொருட்கள் மீது 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, இந்தியா மீதான வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைத்தது. மேலும், இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பல மாதங்களாக, பல கட்டங்களாக இந்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தில் உள்ளதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், வர்த்தக ஒப்பந்தத்தின் இறுதிகட்டத்தில் உள்ளோம். அனைத்து ஒப்பந்தங்களும் இறுதி செய்யப்பட்டு விட்டன. ஒருசில பொருட்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நீடித்து வெளகிறது. அது இறுதி 1 சதவீதம் மட்டுமே. எஞ்சிய 99 சதவீத வர்த்தக ஒப்பந்தம் உறுதியாகி விட்டது.

# 12 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த முதல் அமைச்சர் விஜய் திட்டமிடுகிறார் ஆர்.பி. உதயகுமார் குற்றச்சாட்டு



சென்னை, ஜூலை 1

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் வெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்றைக்குமுதல்அமைச்சர் விஜய் ஊதுகின்ற மகுடிக்கு தமிழ்நாட்டு மக்கள் மட்டுமே மயங்கி கிடக்கிறார்கள் என யாரும் நினைத்து விட வேண்டாம். நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில்த.வெ.க கட்சியை எதிர்த்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ந்து விஜய் ஊதுகிற மகுடிக்குமயக்கம்அடைந்துவருகிறார்கள்.

அதில் கரூர் விஜயபாஸ்கர் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்று விஜய் ஊதும் மகுடிக்கு மயங்கி போன 6வது சட்டமன்ற உறுப்பினர், எங்கே போய் நிற்குமோ இந்த ஜனநாயக கேலிக்கூத்து. இப்படி தொடர்ந்து கொஞ்சமும் கூச்சம் அல்லாமல் அச்சமின்றி அரங்கேற்று வருகின்ற அரசியல் அலங்கோலத்தில் தட்டி கேட்பதற்கு விஜயின் மகுடிக்கு மயங்கி கிடக்கிற தமிழ் சமுதாயத்திற்கு இப்போது வேண்டுமானால் துணிச்சல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இனி இப்படியே தான் காலம் போகும் என்று முதல்அமைச்சர் விஜய் நினைத்தால் அது தவறு. விரைவிலேயே தமிழ் சமுதாயம் உங்களுக்கு துணிச்சலான முடிவை தருவதற்கு காத்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயக திருவிழாவிலே அடுத்தடுத்து ஆள் பிடிக்கிற வேலையில் சளைக்காமல் சாதித்து வருகிறார் முதல்அமைச்சர் விஜய். இது எதைக் காட்டுகிறது? கோவில் திருவிழாவிலே பிள்ளை பிடிக்கிறவர்களுக்கும், ஜனநாயக திருவிழாவிலே எம்.எல்.ஏ.க்களை பிடிக்கிறவர்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதுதான், இப்போது நமக்கு மட்டுமல்ல இந்த நாட்டு மக்களுக்கும் புரியாத புதிராக இருக்கிறது. ஆகவே தமிழக வெற்றிக்கழகம் அரசுக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கிற வகையிலே 12சட்டசபைதொகுதிகளுக்குமொத்தமாக இடைத்தேர்தல் நடத்த விஜய் திட்டமிட்டு இருக்கிறார். அதுவரை இந்த அரசியல் அலங்கோலங்கள் ஜனநாயக கேலிக் கூத்துக்கள் இந்த தமிழ்நாட்டிலே அரங்கேற்றம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

என்ன செய்வது காற்று த.வெ.க பக்கம் வீசுகிறது ஆகவே காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்று அந்த பழமொழியை உண்மை வழியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காற்று திசை மாறும். அப்படி காற்று திசை மாறுகிறபோது ஜனநாயகத்தின் வலிமை என்னவென்று விஜய்க்கு அப்போதுதான் புரியும். இருந்தாலும் இந்த ஜனநாயக கேலிகூத்தை நடத்துகிற ஆணவம் அழிவைத் தரும் என்பதை சுட்டிக்காட்டி எச்சரிக்கையாக இன்றைக்கு எல்லோரும் இருக்க வேண்டும். கரூர் விஜயபாஸ்கர் பொறுத்து இருக்க வேண்டாமா இது நியாயமா தர்மமா? என்று கேட்பதை தவிர வேறு வார்த்தைகள் இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்

# எடப்பாடி பழனிசாமி கொடுத்த பதவியை ஏற்க முடியாது

## எஸ்.பி.வேலுமணி மீண்டும் போர்க்கொடி



கோவை, ஜூலை 1

அ.தி.மு.க.பொதுச்செயலாளர்எடப்பாடிபழனிசாமி கொடுத்த துணை பொதுச்செயலாளர் பதவியை ஏற்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி மீண்டும் போர்க்கொடி தூக்கியுள்ளார்.

கோவையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தனது ஆதரவாளர்களுடன் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்திற்கு வைக்கப்பட்டு இருந்த பேனரில் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் புகைப்படம் இடம்பெறவில்லை என்று பரபரப்பாக பேசப்பட்டது.

இந்த நிலையில், அந்த ஆலோசனைக் கூட்டத்தில் எஸ்.பி.வேலுமணி பேசிய வீடியோ தற்போது வெளியாகி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

அந்த வீடியோவில் எஸ்.பி.வேலுமணி பேசியிருப்பதாவது:

அ.தி.மு.க.பொதுச்செயலாளர்எடப்பாடிபழனிசாமி வழங்கிய துணைப் பொதுச்செயலாளர் பதவியை ஏற்கப்போவது இல்லை. என்னை நம்பி வந்தவர்களை விட்டு விட்டு பதவியை ஏற்க நான் தயாராக இல்லை. என்னுடன் 9 மாவட்ட செயலாளர்கள் உள்ளனர். அவர்கள் யாருக்கும் பதவி கொடுக்கவில்லை. எனக்கு மட்டும் பதவி கொடுத்தால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?.

என்னை நம்பி பின்னால் நிற்பவர்கள் எல்லோரும் கஷ்டப்பட்டவர்கள். வீரமணி, விஜயபாஸ்கர், சி.வி சண்முகம், தங்கமணி அந்த மாவட்டத்தினுடைய ஜாம்பவான்கள். செலவு பண்ணி கட்சியை வளர்த்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பதவி கொடுக்கவில்லை. என்னை நம்பி வந்தவர்களுக்கு பதவியை கொடுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

ஏற்கனவே, த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, எஸ்.பி.வேலுமணி தலைமையில் அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் 25 பேர் விஜய் அரசுக்கு ஆதரவு அளித்தனர். பின்னர் தகுதி நீக்க நடவடிக்கையை எதிர்கொண்டதால், மீண்டும் எடப்பாடி பழனிசாமியுடன் சமரசமாக சென்றனர். இருந்தாலும், எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு கட்சி பதவியை வழங்காததால் அதிருப்தி நிலவி வருகிறது.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு எஸ்.பி.வேலுமணிக்கு துணை பொதுச்செயலாளர் பதவியை எடப்பாடி பழனிசாமி வழங்கினார். ஏற்கனவே, கட்சியில்அவர்வகித்ததுதலைமைநிலைய செயலாளர் பதவி. தற்போது அந்த பொறுப்பை மாற்றி விட்டு துணை பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எஸ்.பி.வேலுமணியின்ஆதரவாளர்களுக்கு மீண்டும் பொறுப்பு வழங்கப்படாதது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழ்நிலையில்தான், கோவையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தனது ஆதங்கத்தை எஸ்.பி. வேலுமணி கொட்டி தீர்த்து இருக்கிறார்.

ஏற்கனவே, அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் 6 பேர் ராஜினாமா செய்து உள்ளனர். இதில், 4 பேர் முன்பே த.வெ.க வில் இணைந்துவிட்ட நிலையில், சி. விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகிய இருவரும் விரைவில் த.வெ.க.வில் இணைய இருக்கின்றனர்.

இந்த சூழ்நிலையில் எஸ்.பி.வேலுமணியின் இந்த ஆவேச பேச்சு, அவரும் அ.தி.மு.க.வில் இருந்து வெளியேற தயாராகிவிட்டாரா? என்ற கேள்வியை கட்சியினர் மத்தியில் எழுப்புகிறது. அவரும் வெளியேறினால், சில அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் உடன் வெளியேறுவார்கள் என்று பரபரப்பாக பேசப்படுகிறது.

# சட்டம்ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்: 2ம் நாள் மாநாட்டில் முதல்அமைச்சர் விஜய் அறிவுறுத்தல்



சென்னை, ஜூலை 1

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் மாநாட்டில் சட்டம்ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று முதல்அமைச்சர் விஜய் அறிவுறுத்தினார்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் மாவட்ட கலெக்டர்கள்மற்றும்போலீஸ்அதிகாரிகள் மாநாடு நடத்தப்பட்டு, சட்டம்ஒழுங்கு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

அதன்படி, முதல்அமைச்சர் விஜய் தலைமையில் 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. முதல் நாளில் நடைபெற்ற இரு அமர்வுகளில் மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் மற்றும் அரசுத் துறைகளின் செயலாளர்கள் பங்கேற்று பல்வேறு நிர்வாக அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

மாநாட்டின் 2வது நாள் கூட்டம் காலை சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர்கள், வனத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மின் உற்பத்தி நிலையங்கள் நிகழ்நேர தரவுகளை உடனுக்குடன் பகிர்வது இனி கட்டாயம் அமைச்சர் நிர்மல் குமார் தகவல்



சென்னை, ஜூலை 1

புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் நிகழ்நேர தரவுகளை உடனுக்குடன் தமிழ்நாடு மின்வாரியத்துடன் பகிர்வது இனி கட்டாயம். உற்பத்தி செய்யும் நிகழ்நேர தரவுகளை உடனுக்குடன் தமிழ்நாடு மின்வாரியத்துடன் பகிர்வது இனி கட்டாயம். தவறும்பட்சத்தில் மின்உற்பத்தி நிறுவனங்களின் மின் உற்பத்தியில் 10% மின் கணக்கீடு கழித்து கணக்கிடப்படும் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தகவல்.

தமிழ்நாட்டில் காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி வேகமாக அதிகரித்து வருகிறது. தற்போது மாநிலத்தின் மொத்த மின் தேவையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பங்கை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூர்த்தி செய்து வருகிறது. இவ்வகை மின்உற்பத்தி இயற்கை சூழலைப் பொறுத்து மாறுபடும் தன்மை கொண்டதால், மாநில மின் கட்டமைப்பை பாதுகாப்பாகவும், சீராகவும், சிக்கனமாகவும் இயக்குவதற்கு நிகழ்நேர தகவல்கள் மிகவும் அவசியமாகின்றன.

இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டுள்ள "தமிழ்நாடு மின்சார கட்டமைப்பு விதிமுறை – 2026"இன் படி, அனைத்து காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களும், மாநில மின் சுமை பகிர்மான மையத்துடன் நவீன கணினி அடிப்படையிலான தொலைவழி கண்காணித்து கட்டுப்படுத்துதல் மற்றும் தரவு சேகரிப்பு அமைப்பின் மூலம் நிகழ்நேர தரவு தொடர்பு வசதியை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கானஅறிவிப்பைமாநிலமின்பகிர்ந்தளிப்பு மையம், 30.05.2026 அன்று அனைத்து காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தியாளர்களுக்கும் வழங்கியுள்ளது.

இந்த நடைமுறையின் மூலம்:

★ மாநில மின் கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை உறுதி செய்யப்படும்.

★ மின்உற்பத்தி மற்றும் மின்தேவையை துல்லியமாக திட்டமிட முடியும்.

★ நுகர்வோருக்கு இடையூறு இல்லாத, தரமான மின் விநியோகம் வழங்க உதவியாக இருக்கும்.

★ புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேலும் திறம்பட ஒருங்கிணைக்க வழிவகுக்கும்.

நிகழ்நேர தரவு தொடர்பு வசதியை ஏற்படுத்தாத மின் உற்பத்தி நிலையங்களுக்கு, தமிழ்நாடு மின்சார கட்டமைப்பு விதிமுறைகளின் படி, மாநில மின் சுமை பகிர்மான மையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தற்போது காற்றாலை மற்றும் சூரியசக்தி 12,000 த்திற்கு மேற்பட்ட மின் உற்பத்தியாளர்கள் உள்ளனர். இதில் 10% க்கும் குறைவான மின்உற்பத்தியாளர்களே நிகழ்நேர தரவுகளை மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்துடன் பகிர்ந்து கொள்கின்றனர். சுமார் 90% பசுமை மின் உற்பத்தியாளர்கள் மேற்கண்ட நிகழ்நேர தரவுகளை பல கட்ட அறிவிறுத்தல்கள், நினைவூட்டல் கடிதங்கள் மற்றும் உயர்மட்ட கூட்டங்கள் மூலம் அறிவுறுத்தியும் தற்போது வரை மாநில பகிர்ந்தளிப்பு மையத்திற்கு பகிர்ந்தளிக்கவில்லை.

எனவே வாரிய தரப்பில் இருந்து 30.05.2026 நாளிட்ட 15நாட்கள் காலக்கெடுவுடன்கூடியஅறிவிப்புகடிதம்அனைத்து பசுமை எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மின் உற்பத்தியாளர்கள் மற்றும் பல்வேறு சங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கும் விரிவான விளக்கங்கள் மூலமாக தெளிவுப்படுத்தப்பட்டது.

மேலும், மத்திய அரசின் தென்மண்டல மின் ஆற்றல் குழுவின் தொடர் வலியுறுத்தல்கள் மற்றும் மின் கட்டமைப்பு குறியீடுகள் போன்ற சட்டரீதியான மற்றும் தொழில்நுட்பரீதியான காரணங்களினால் மேலும் காலக்கெடுவினை நீட்டிக்க இயலவில்லை. எனவே, அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எஸ்சிஏடிஏ(SCADA) நிகழ்நேர தரவுகளை முழுமையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் முதற்கட்டமாக 10% மின்உற்பத்தியும், 30 நாட்களுக்கு பிறகு முழு மின் உற்பத்தியும் மின் அனுப்புகை மற்றும் விலகல் கணக்கீட்டு செயல்முறைகளில் இருந்து விலக்கப்படும்.

45 நாட்களுக்கு பின்னரும் தரவுகள் ஒருங்கிணைக்கப்படவில்லையெனில், மத்திய மின்சார ஆணையத்தின் விதிமுறைகளின்படி மாநில மின்பகிர்ந்தளிப்பு மையம் எஸ்எல்டிசி(SLDC) உரிய மேல்நடவடிக்கைகளை மேற்கொண்டு, மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கும் தகவல்களை தெரிவிக்கும்.

இதற்கேற்ப, ஜூன் 2026 மாதத்திற்கான மின் ஆற்றல் கணக்கீடு மற்றும் சரிசெய்தல் பணிகள் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மூலம் மேற்கொள்ளப்படும். எனவே, அனைத்து காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தியாளர்களும், நிகழ்நேர தரவு தொடர்பு வசதியை உடனடியாக ஏற்படுத்தி, மாநில மின் கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் நம்பகமான மின் விநியோகத்திற்குமுழுஒத்துழைப்பைவழங்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

# ஊர்காவல்படையினருக்கு காலமுறை ஊதியத்துடன் கூடிய பணி நிலைப்பு வழங்க வேண்டும் வேல்முருகன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 1

தமிழக வாழ்வுரிமைக்கட்சி தலைவர் வேல்முருகன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

ஊர்காவல்படையினர் ஊதிய உயர்வு தொடர்பாக கடந்த 10 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். அவர்களுக்கு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றும் வகையில் காலமுறைஊதியத்துடன்கூடியபணிநிலைப்பு வழங்க வேண்டும்.

தமிழகத்தில் காவல்துறையினருக்கு உதவிட 1963 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஊர்காவல் படையில் பணியாற்றுபவர்களுக்கு 2011 ஆம் ஆண்டு வரை ஒரு நாள் ஊதியமாக ரூ.67 மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அந்த ஆண்டில் அவர்களுக்கான ஊதியம் ரூ.152 ஆக உயர்த்தப்பட்டது. இப்படையில் 15,622 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் 15 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றனர். இவர்களில் 90 சதவீதம் பேர் இதை மட்டுமே முழுநேர தொழிலாகக் கொண்டுள்ளனர்.

அவர்களுக்கு மாத ஊதியம் ரூ.2,800 ஆக உயர்த்த வேண்டும் என ஊர்காவல் படையினர் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், நாள் ஒன்றுக்கு ரூ.560 ஆக உயர்த்தி ஆணையிட்டது. இதனை ஏற்ற தமிழக அரசு 2017 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ.560 ஆக உயர்த்தி ஆணையிட்டது. ஆனால், ஊர்காவல்படையினரின் அதிகாரப்பூர்வ பணி நாட்களின் எண்ணிக்கையை 5 நாட்களாக குறைத்துவிட்டது. அதனால் அவர்களின் மாத ஊதியம் ரூ.2,800ல் இருந்து உயரவில்லை. பணி நாட்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற ஊர்காவல் படையினரின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு 2019 ஆம் ஆண்டில் பணி நாட்களை 10 ஆக உயர்த்தியது. அதே நேரத்தில் பணி நேரத்தை 4 மணி நேரமாகவும், ஊதியத்தை ரூ.280 ஆகவும் குறைத்துவிட்டது.

அதனால், மாதத்துக்கு 10 நாட்கள் பணியாற்றினாலும் அதே ரூ.2,800 மட்டுமே ஊதியமாக கிடைத்தது. இதன் மூலம் உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும் மாத ஊதியம் ரூ.2,800க்கு மேல் உயர்த்தப்படவில்லை. மாத ஊதியத்தை உயர்த்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள் மறுப்பதை சுட்டிக்காட்டி ஊர்காவல்படையினர் மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகினர். அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஊர்காவல் படையினருக்கு மாதம் முழுவதும் பணி வழங்க வேண்டும் மற்றும் மாத ஊதியமாக ரூ.16,800 வழங்க வேண்டும் என்று ஆணையிட்டது. இந்த ஆணையை ஆந்திரா, ஒடிசா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட போதிலும், தமிழ்நாட்டில் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் காவல்துறையினருக்கு இணையாக ஊர்காவல் படையினரும் பணியாற்றுகின்றனர். பெயரளவில் இந்த அமைப்பு காவல்துறையின் துணை அமைப்பு என்றாலும், கள அளவில் இவர்கள் காவல்துறைக்கு இணையாகவே செயல்படுகின்றனர். காவல்துறையில் அதிகரித்துக் கொண்டே செல்லும் காலியிடங்கள் மற்றும் பெருகி வரும் காவலர்கள் தேவைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, ஊர்காவல் படையின் சேவை அளப்பரியது என அனைத்து நிலை அலுவலர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

பணி நிலைப்பு மற்றும் ஊதிய உயர்வு தொடர்பாக கடந்த 10 ஆண்டுகளாக போராடி வரும் ஊர்காவல்படையினர், தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசில் தங்களுக்கு விடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டும், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றும் வகையிலும், ஊர்காவல் படையினருக்கு காலமுறை ஊதியத்துடன் கூடிய பணி நிலைப்பு வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் தலைமையில் நடந்த இந்த முகாமில் பொது மக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டன இதன் பிறகு சிறுசேமிப்பு துறையின் சார்பில் உலக சிக்கன நாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டி, கட்டுரைப்போட்டி, சொற்றொடர்கள் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் பரிசுகளை மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் வழங்கினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) விஜய்ராஜ்குமார் இதில் கலந்து கொண்டார்.

## தூத்துக்குடி

# தவெகவுக்கு தாவிய 2 கவுன்சிலர்களால் மாநகராட்சி கூட்டத்தில் சலசலப்பு





தூத்துக்குடி, ஜூலை 1

தூத்துக்குடி மாநகராட்சியின் மாமன்ற கூட்டம் நேற்று மாநகராட்சி கூட்ட அரங்கில் மேயர் என்.பி.ஜெகன் பெரியசாமி தலைமையில், ஆணையர் பிரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தீர்மானங்களை வாசிக்க தொடங்கிய போது, சமீபத்தில் அதிமுகவில் இருந்து தவெகவுக்கு தாவிய கவுன்சிலர் மந்திரமூர்த்தி, திமுகவில் இருந்து தவெகவுக்கு தாவிய கவுன்சிலர் ராமர் ஆகிய 2 பேரும் உட்காராமல், கழுத்தில் தவெக துண்டை அணிந்து கொண்டு கூட்டத்தின் முன் வரிசை இருக்கைகளுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களை பார்த்த மேயர் ஜெகன் பெரியசாமி, "உங்களுக்கென பின் வரிசையில் இருக்கைகள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதில் நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று கேட்டு கொண்டார். அதற்கு கவுன்சிலர் மந்திரமூர்த்தி, முன்பு வழக்கமாக அமரும் முன் வரிசையில் தன்னை உட்கார அனுமதிக்க வேண்டும்" என்றார்.

அதற்கு மேயர், "முன்பு அதிமுக மாநகராட்சி கொறடாவாக இருந்ததால், முன் வரிசையில் உங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இப்போது உங்களை அப்பதவியிலிருந்து நீக்கியதாக அதிமுக மாவட்ட செயலாளர் சண்முகநாதன் மாநகராட்சிக்கு கடிதம் அளித்துள்ளார். அந்த கடிதத்தின்படி அதிமுக சார்பில் புதிய கொறடாவாக நியமிக்கப்பட்டு உள்ள 57 வது வார்டு உறுப்பினர் ஜெயலட்சுமிக்கு அந்த இருக்கை ஒதுக்கப்பட்டு விட்டது. எனவே, நீங்கள் பின்னாடி சென்று உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் உட்காருங்கள்" என மீண்டும் தெரிவித்தார். அதனையடுத்து, மந்திரமூர்த்தி "நான் பேச வேண்டும். எனவே மைக் தர வேண்டும்" என்றார். அதற்கு பதிலளித்த மேயர், "பின்னாடி சென்று உங்கள் இருக்கையில் உட்காருங்கள். மைக் தரப்படும். பேசுங்கள்.இனி மேல் பழைய இருக்கை உங்களுக்கு நிச்சயமாக கிடையாது" உறுதிபட தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த மந்திரமூர்த்தி மற்றும் ராமர் ஆகியோர் முன் வரிசைக்கு முன்பாக தரையில் அமர்ந்து கொண்டனர். அதனை தொடர்ந்து இருவரையும் தங்களின் இருக்கைக்கு சென்று உட்காருமாறும், தரையில் உட்காரக்கூடாது என்றும் மேயர் மீண்டும் கேட்டு கொண்டார். மேலும், "தீர்மானங்கள் வாசிப்பதை நிறுத்த வேண்டாம்" என்றும் கேட்டுக்கொண்டார். இதனை அடுத்து மந்திரமூர்த்தி, ராமர் ஆகிய இருவரும், தங்களை மைக்கில் பேச அனுமதிக்குமாறு ஆணையரை முற்றுகையிட்டனர். கூட்டம் தாமதம் ஆவதால் ஆத்திரம் அடைந்த அதிமுக திமுக கவுன்சிலர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று, அவர்கள் 2 பேரும் இருக்கையில் உட்கார வேண்டும் என்றும், முடியாவிட்டால் வெளியே செல்லுமாறும் குரல் எழுப்பினர். உடனே, மேயர் குறுக்கிட்டு, திமுக கவுன்சிலர்களை அமைதியாக உட்காருமாறும், 2 பேருக்கும் தான் பதில் சொல்லிக் கொள்வதாகவும் தெரிவித்தார். ஆனாலும் தொடர்ந்து, பல்வேறு கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும், தவெகவுக்கு தாவிய உறுப்பினர்கள் குறித்து கருத்துக்களை முன் வைத்ததால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது. பதற்றம் நீடித்தது.

இதனால் எரிச்சல் அடைந்த மேயர் ஜெகன் பெரியசாமி, கவுன்சிலர்களும் செய்தியாளர்களும் அவரவர் இடத்திற்கு சென்று உட்காருமாறு சத்தமாக பேசினார். மேலும், தவெகவுக்கு தாவிய 2 கவுன்சிலர்களிடம் உங்களின் இருக்கைக்கு சென்று உட்காருங்கள். அல்லது கிளம்புங்கள். இல்லையென்றால், உங்களை அப்புறப்படுத்த வேண்டி வரும்" என தெரிவித்தார். ஒரு கட்டத்தில், ராமரை பார்த்து ஜெயிக்க வைத்த கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு மாறிய நீங்கள் துரோகி..." என்றும், மந்திரமூர்த்தியை பற்றி அதிமுககாரர்கள் பேசி கொள்வார்கள்" என்றும் காட்டமாக தெரிவித்தார். இதனையடுத்து, கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்வதாக கூறி, மந்திரமூர்த்தி, ராமர் ஆகியோர் கூட்ட அரங்கில் இருந்து வெளியேறினர்.

கூட்டம் முடிந்த பிறகு வெளியே வந்த மேயர் என்.பி.ஜெகன் பெரியசாமி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறுகையில் மாநகராட்சி அலுவலகத்துக்குள் நான் நுழைந்த போது போலீசார் நிறைய பேர் நின்று கொண்டு இருந்தார்கள். கடந்த நான்கரை ஆண்டுகளாக வார்டில் உள்ள மக்கள் பிரச்சினைகளை பற்றி பேசாமல், சம்பந்தமே இல்லாமல் மாநில அளவிலான பிரச்சனையை மாநகராட்சி அவையில் பேசுவதும், அதனை வீடியோ எடுத்து ரீல்ஸ் போடுவதுமே மந்திரமூர்த்திக்கு வழக்கம். அதிமுகவில் கொறடா மாற்றப்பட்டுவிட்டதால், அவருக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அதில் உட்காராமல் பழைய இடத்தில் தான் உட்காருவேன் என்று பிடிவாதம் செய்கிறார். பத்திரிகையாளர்களை கண்டவுடன் சத்தமாக பேசுகிறார். அதன் வழியாக அரசியல் விளம்பரத்தை தேடுகிறார் என தெரிவித்தார்.

# சேலம் மாவட்டத்தில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடும் பணி

சேலம், ஜூலை 1

சேலம் மாவட்டத்தில் ஜூலை 1முதல் ஆகஸ்ட் 10 வரை அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது. இந்த பணியானது கால்நடை பராமரிப்பு துறையின் மூலமும், பால் உற்பத்தியாளர் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் 1.7.2026 முதல் வரும் 10.8.2026 முடிய சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக ஒன்பதாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறும்.

கோமாரி நோய் என்பது இரட்டை குழம்பின கால்நடைகளை தாக்கி காய்ச்சல் மற்றும் கொப்புளங்களை ஏற்படுத்தும் நச்சு உயிரி தொற்று நோயாகும். பண்ணையில் சுகாதாரமற்ற பராமரிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், உமிழ்நீர் மற்றும் பண்ணை கழிவுகள் மூலமும் இந்த நோய் பரவுகிறது.

கோமாரி நோயினால் மாடுகள் சினை பிடிக்காமல் போவது, பால் உற்பத்தி குறைதல், தோல் மற்றும் தோல் பொருட்களின் மதிப்பு இறக்கம், எருதுகளின் வேலைத்திறன் பாதிப்பு மற்றும் கன்றுகளின் அதிக இறப்பு ஆகியவை ஏற்பட்டு கால்நடை வளர்ப்போர்க்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்துகிறது.

இந்த கொடிய நோயை தடுக்கும் பொருட்டு கால் மற்றும் வாய் நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாநிலத்தில் உள்ள அனைத்து மாடுகள் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில். 1.7.2026 முதல் 10.8.2026 முடிய அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் நான்கு மாத வயதுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு அந்தந்த ஊராட்சிகளில் உள்ள கால்நடை மருந்தகப் பகுதிகளில் 149 குழுக்கள் மூலம் முன்கூட்டியே தக்க விளம்பரம் செய்து ஒன்பதாவது சுற்று "கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி" போடும் பணி நடைபெறுகிறது. எனவே விவசாயம் செய்பவர்கள் தங்கள் பகுதிகளில் தடுப்பூசி போடப்படும் நாளினை தவறாது அறிந்து தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை கொண்டு வந்து இலவசமாக தடுப்பூசி போட்டு பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# ஈரோடு கள்ளுக்கடை மேட்டில் மூகாம்பிகை அம்மனுக்கு சிறப்பு யாகம்



ஈரோடு ஜூலை 1

ஈரோடு கள்ளுக்கடை மேட்டில் மூகாம்பிகை அம்மன் கோவில் உள்ளது. இங்கு உலக அமைதிக்காக ஒவ்வொரு மாதமும்பவுர்ணமிதினத்தன்றுசிறப்புயாகம்நடைபெற்று வருகிறது. 50 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த யாகம் நேற்றும் நடந்தது.

அப்போதுவேதங்கள்முழங்கமூகாம்பிகைஅம்மனுக்கு சிறப்பு யாகம் மற்றும் அபிஷேகம் நடந்தது. மேலும் சத்திய நாராயணா பூஜையும் நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. உலகத் தமிழ் ஜோதிட ஆய்வு நிறுவன தலைவர் ஓம் உலகநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார். ஈரோடு ஆருத்ரா கபாலீஸ்வரர் கோவில் அறங்காவலர் டாக்டர் சுந்தரராஜ் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# பட்டாம்பூச்சி சொன்ன கதை புத்தகத் திறனாய்வு கூட்டம்



கோவில்பட்டி, ஜூலை 1

கோவில்பட்டியில் சகாராவை தாண்டாத ஒட்டகம் பயிற்சிமையம்சார்பில்இலக்கியச்சாரல்பதினொன்றாவது நிகழ்வாகபட்டாம்பூச்சிசொன்னகதைபுத்தகத்திறனாய்வு கூட்டம் சிவதாம் கல்வி அறக்கட்டளை கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நல்லாசிரியர் ஜான் கணேஷ் தலைமை தாங்கினார். ஆசிரியை கவிதா அனைவரையும் வரவேற்றார். உரத்த சிந்தனைத் தலைவர் சிவானந்தம் முன்னிலை வகித்தார். கம்பன் கழகத் துணைத்தலைவர் இராஜாமணி,கவிஞர்கவிமேகம்,இந்திராணிஅம்மையார், கவிதாயினி விநாயக சுந்தரி, பணி ஓய்வு பெற்ற காவல் கண்காணிப்பாளர் மனோகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் "பட்டாம் பூச்சி சொன்ன கதை" என்ற புத்தகத்தை ஆசிரியைகள் முருக சரஸ்வதி, ஜெயபாரதி, சுப்புலட்சுமி, குருலட்சுமி, இராதாமற்றும்திருநாவுக்கரசர் வங்கி மேலாளர் ஓய்வு ஆகியோர் திறனாய்வு செய்தனர். கூட்டத்தில் எழுத்தாளர்கள் இராஜேஷ் சங்கரப்பிள்ளை, இப்ராஹீம், கம்பன்கழகத்தலைவர்துரைப்பாண்டி, பணி ஓய்வு பெற்ற வங்கி மேலாளர் சங்கர், வழக்கறிஞர் முத்துராமலிங்கம், கோபாலகிருஷ்ணன், ஜெயா ஜனார்த்தனம் பேராசிரியர் செல்வம் உட்பட பலர்கலந்து கொண்டனர். புத்தக ஆசிரியர் பொன்னுராஜ் ஏற்புரை வழங்கினார். இலக்கியச்சாரல்நிறுவனர்தினகரன்கல்லூரி பேராசிரியர் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களை வாழ்த்தினார். இறுதியாக கவிஞர் போத்திராஜ் நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

# திருட்டு வழக்கில் தலைமறைவாக இருந்து வந்த எதிரி கைது



திருச்சி, ஜூலை 1

திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தெற்கு மலை செடி மலை முருகன் கோயில் நாவலர் நெடுஞ்செழியன் தெருவில் வசிக்கும் ராணி என்பவரது பூட்டிய வீட்டின் பூட்டை திறந்து உள்ளே சென்று வீட்டில் இருந்த காப்பர் வயர் கேபிள். பீரோவில் இருந்த 2000 ரூபாய் பணம் மற்றும் இரண்டு கிராம் அளவு கொண்ட சுமார் 25 ஆயிரம் மதிப்புள்ள ஒரு ஜோடி தங்க அல்ல காது தோடு ஒரு தங்க மூக்குத்தி ஆகியவற்றை திருடி சென்ற வழக்கில் மூன்று நபர்கள் கைதுசெய்யப்பட்டுநீதிமன்றகாவல்க்குஉட்படுத்தப்பட்ட நிலையில் தலைமுறைவாக இருந்து வந்த முக்கிய குற்றவாளியான கோகுல் குமார் என்பவர் துவாக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நாகராஜ் அவர்களால் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து சுமார் 25 ஆயிரம் மதிக்கத்தக்க தங்கத்தோடு மற்றும் மூக்குத்தி கைப்பற்றப்பட்டு கணம் Jm6 நீதிமன்றத்தின் முன்பு ஆஜர் படுத்தப்பட்டு நீதிமன்ற காவல் அடைப்பு பெற்று திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் மேற்படி நபர் அதே ஏரியாவில் வசித்துக் கொண்டு அங்கு வசிக்கும் மக்கள் தினக்கூலி என்பதால் வீட்டில் உள்ள அனைவரும் கூலி வேலைக்கு சென்று விட்டு நேரம் மாற்றி மாற்றி வீட்டிற்கு வருவதால் வீட்டின் பூட்டு சாவியை ஒருவர் மட்டும் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வீட்டிற்கு வெளியே பாத்ரூம் டப்பாவிலோ மிதி அடைக்கு கீழே அல்லது மாடா குழியில் மின்சார பெட்டியின் மேல் செருப்பிற்கு அடியில் என வீட்டு சாவியை மறைத்து விட்டு செல்ல வேண்டிய நிலையை நன்கு அறிந்து கொண்ட எதிரி கோகுல் குமார் இதுபோன்று. இதுவரை நான்கு குற்றங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் தின கூலிக்கு வேலைக்கு செல்லும் மக்களின் பரிதாப நிலை இதுவே ....

# தமிழக மாணவர்களிடையே தமிழ் கலாச்சாரத்தைப் பரப்ப தமிழ் திருவிழா

## போகோ சேனல் புதிய முயற்சி



சென்னை, ஜூலை 1

தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் சமூக விளையாட்டுகளைப் பள்ளி மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் நோக்கில், போகோ (POGO) சேனல் தமிழ் திருவிழா எனும் பிரத்யேகப் பள்ளித் தொடர்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையைச் சேர்ந்த 200 பள்ளிகளில் பயிலும் 1லட்சத்திற்கும்மேற்பட்டகுழந்தைகளைச் சென்றடைவதே இதன் நோக்கமாகும்.

டிஜிட்டல் திரைகளைத் தாண்டி, சோட்டா பீம், லிட்டில் சிங்கம் மற்றும் சம்பத் ஷம்பத் போன்ற புகழ்பெற்ற கார்ட்டூன் கதாபாத்திரங்கள் மூலம் மாணவர்கள் தமிழ் பாரம்பரியத்தை நேரில் அனுபவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சைமன் சேஸ் விளையாட்டின் தமிழ் வடிவம். வேடிக்கையான மாறுவேட ரிலே பந்தயம். சம்பத் ஷம்பத் உடனான கலகலப்பான வேகப் போட்டி. தமிழ் உணவு, சினிமா மற்றும் கலாச்சாரம் குறித்த வினாடிவினா. இந்தத் திட்டத்திற்கு பிரிட்டானியா மில்க் பிகிஸ் முதன்மை ஸ்பான்சராகவும், அருண் ஐஸ்கிரீம்ஸ் மற்றும் குளுக்கோவிட்டா குளுக்கோஸ் லாலிபாப் ஆகியவை இணை ஸ்பான்சர்களாகவும் செயல்படுகின்றன. இதுகுறித்துவார்னர்பிரதர்ஸ்டிஸ்கவரியின் விளம்பர வருவாய்த் தலைமை அலுவலர் தனஸ் மேத்தா கூறுகையில், குழந்தைகளுக்குப் பிடித்த கதாபாத்திரங்களுடன் இணைந்து, அவர்களின் பாரம்பரியத்தைப் பெருமையுடன் கொண்டாடும் ஒரு தளமாக இது அமையும் என்றார். சந்தைப்படுத்தல் தலைமை அலுவலர் ஜானவி வியாஸ் பேசுகையில், மாணவர்கள் விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் கலாச்சாரத்தோடு ஆழமாக இணைய இது உதவும் என்று தெரிவித்தார்.




## தென்காசியில்

# தவெக அமைச்சரை கண்டித்து தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி, ஜூலை.1

பொது வெளியில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக வெளியான வீடியோ தொடர்பாக தவெக மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தி தென்காசி தெற்கு மாவட்ட திமுக மற்றும் தென்காசி தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமை தாங்கினார். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீகுமார் மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைக்கதிரவன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திமுகவினர் அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தியும், அவரது செயலுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, சேசுராஜன், சேக் தாவூது, ஆறுமுகச்சாமி, அவைத்தலைவர்முத்துப்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் முகமது ரஹீம், ராஜேஷ்வரன், தமிழ்ச்செல்வி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா, தென்காசி நகரச் செயலாளர் சாதிர், சுரண்டை நகரச் செயலாளர் கணேசன், செங்கோட்டை நகரச் செயலாளர் வெங்கடேசன், கடையநல்லூர்வடக்குநகரச்செயலாளர் அப்பாஸ், கடையநல்லூர் நகரச் செயலாளர் பீரப்பா, ஒன்றியச் செயலாளர்கள் அழகு சுந்தரம், ரமேஷ், சீனித்துரை, அன்பழகன், ஜெயா ஐயப்பன், திவான் ஒலி, ரவிசங்கர், மணிகண்டன், சுரேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள் குட்டி, முத்தையா, ராஜராஜன், கோபால், , சிதம்பரம், வெள்ளத்துரை , முகமது உசேன் என்கின்ற தங்கப்பா, கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் எட்வின், கதிர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், கழகத் தோழர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 300க்கும் மேற்பட்ட திமுக வினரை காவல்துறையினர் கைது செய்து காவல்துறை மற்றும்அரசுபேருந்துகள்மூலம்கீழப்புலியூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அடைத்து வைத்தனர்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் வாணியாறு அணைப்பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமினை வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தென்னரசு, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை இயக்குனர் சதீஷ் முன்னிலையில் நேரில் சென்று பார்வையிட்டு முகாமில் வசிக்கும் மக்களிடம் கலந்துரையாடி கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, ஊரக வளர்ச்சி முகாமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், அரூர் வருவாய் கோட்டாட்சியர் செம்மலை, வட்டாட்சியர்கள் பார்வதி, சின்னா உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருச்சி பெண்ணை தாக்கும் திருநங்கை சிசிடிவி காட்சி



திருச்சி, ஜூலை 1

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில், தனியார் பேருந்தில் பயணித்த ரஹீமா என்ற பெண்ணிடம் யாசகம் கேட்டுள்ளார் ஒரு திருநங்கை. யாசகம் தர மறுத்ததால் ஆத்திரமடைந்த திருநங்கை, ரஹீமாவை தாக்கியுள்ளார். இந்த சம்பவம் குறித்த சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில், ரஹீமா கோட்டை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், சம்பந்தப்பட்ட திருநங்கையை போலீசார் தேடி வருகின்றனர்.



## துறையூர் அருகே

# சிக்கந்தம்பூரில் மீன் பிடி திருவிழா

திருச்சி, ஜூலை 1

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே உள்ள சிக்கதம்பூர் ஏரியில் மீன்பிடித் திருவிழா நடைபெற்றது. இதில் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கெண்டை, முள்கேளுத்தி, அயிரைஉள்ளிட்ட மீன்களைப் பிடித்தனர். எனினும், மீன்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## அம்பராம்பாளையம் மழ்ஹருல் ஹுதா அரபிக் கல்லூரியில்

# முதல்வருக்கு மதிப்புறு முனைவர் பட்டம்



கோவை ஜூலை: 1

பொள்ளாச்சியைஅடுத்த அம்பராம்பாளையம் மழ்ஹருல் ஹுதா அரபிக் கல்லூரியில் பல்வேறு ஏழை, எளிய மாணவர்களுக்கு அரபி மற்றும் தமிழ் வழியில் கல்வி பயிற்றுவிப்பதுடன் ஏனைய பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை கல்லூரி முதல்வர் முஹம்மது முஹ்யித்தீன் தாவூதி வழங்கி வருகிறார். இந்த சமூகப் பணிகளை பாராட்டி புதுடெல்லியில் இயங்கி வரும் அச்சீவர் அவார்ட் கவுன்சில் என்ற அமைப்பு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது. விருதினை பெற்றமைக்காக முதல்வருக்கு கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



## கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில்

# தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை ஆம்னி பஸ்ஸில் கடத்தி வந்த ஓட்டுநர் கைது

கோவில்பட்டி, ஜூலை 1

கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் நவநீத கிருஷ்ணன் தலைமையில் உதவி ஆய்வாளர் நியூட்டன் மற்றும் போலீசார் கோவில்பட்டி புதிய பேருந்து நிலையம் பகுதியில் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டபோது, அவ்வழியாக வந்த ஆம்னி பஸ்சை நிறுத்தி சோதனை செய்ததில், அதில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தையடுத்து 250 கிலோ புகையிலைபொருட்கள்மற்றும்ஆம்னிபஸ்ஆகியவற்றை பறிமுதல்செய்து ஆம்னிபஸ்டிரைவரானதிருநெல்வேலி, பத்தமடை பகுதியைச்சேர்ந்த சங்கரன்மகன்பாலமுருகன் (42) என்பவரை கைது செய்து வழக்குபதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா பெற்றுக் கொண்டார். பொதுமக்கள் இடமிருந்து பெறப்பட்டமனுக்கள்மீதுஉடனடியாகநடவடிக்கைஎடுக்கதுறைசார்ந்தஅலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இதில் தனித்துணை ஆட்சியர் செல்வி உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## போதைப்பொருள் பயன்படுத்திய வீடியோ

# த.வெ.க அமைச்சரைபதவி நீக்க கோரி, போலீசாரின் தடையை மீறி திமுகவினர் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் ஜூலை1

போதை பொருள் பயன்படுத்திய தாக வீடியோ, வெளியான நிலை யில் பதவி நீக்கம் செய்யக் கோரி தஞ்சாவூரில் போலீசாரியின் தடையை மீறி திமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பெண்கள் உள்பட 95 பேர் கைது செய்யப்பட்டனர்

சென்னை விளையாட்டு மைதா னத்தில் போதை பொருள் பயன் படுத்தியதுபோல் வீடியோவெளியானவிவகாரத்தில்தமிழக மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் திமுக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது

ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி அளிக்க வவில் லை இருந்தாலும் தடை மீறி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினரை போலீசார் கைது செய்தனர் தஞ்சாவூரில் தடை மீறி திமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈ டு ப ட் ட ன ர்

அதன்படி தஞ்சாவூர் பனங்கல் கட்டிடம் முன்பு திமுக மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற்றது . இதற்குமாணவரணிமாநகரஅமைப்பாளர் ராம்குமார்தலைமைதாங்கினார்முன்னாள் எம்எல்ஏ டி .கே.ஜி நீல மேகம், திமுக மாநகர செயலாளர் சண் ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இதில் வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ராஜேஷ் ,கும்பகோணம் மாநகர அமைப்பாளர் கௌதமன், துணை அமைப்பாளர்கள் தீனா ,தேவராஜ், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்வம், பகுதி செயலாளர்கள் கார்த்திகேயன், வாசிம் ராஜா, மண்டல குழு தலைவர்கள் மேத்தா, ரம்யா சரவணன், கலையரசன், மற்றும் கவுன்சிலர்கள் மாணவர் அணி, மகளிர் அணி உள்பட அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

ஆர்ப்பாட்டத்தில் மனிதவளமேம்பாட்டு துறை அமைச்சர் சரத் குமாரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் .அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், கோஷங் கள் எழுப்பப்பட்டது .தடையை மீறி நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் உள்பட 95 திமுக வினரை போலீசார் கைது செய்தனர்

திமுகவினரின் போராட்டத்தை யொட்டி தஞ்சாவூர் நகர துணை போலீஸ் சோமசுந்தரம் தலைமை யில் இன்ஸ்பெக்டார்கள் மணிகண் டன், சுபா ,பசுபதி மற்றும் ஏராள மான போலீசார் குவிக்கப்பட்டி ருந்தனர்

## தருமபுரியில்

# மனைவி, மகளை கொன்று வாலிபர் தற்கொலை

தருமபுரி ஜூலை 01

தருமபுரி அருகே கோட்டை கோவில் தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் சந்தோஷ் என்பவர் தனது மனைவி சரண்யாவை கழுத்தை நெரித்தும் மற்றும் மகளை சுத்தியால் அடித்தும் கொலை செய்தாக கூறப்படுகிறது. இதையடுத்து அதியமான்கோட்டை அருகே லாரி முன்பு விழுந்து அவரும் தற்கொலை செய்துகொண்டார்.

இந்த நிலையில் இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ராணுவ வீரர்களின் மனைவிகள் ஆலமரத்தில் கயிறு கட்டி சிறப்பு வழிபாடு



நீலகிரி, ஜூலை 1

நீலகிரி மாவட்டம் குன்னூரில் ராணுவத்தில் பணியாற்றும் ராணுவ வீரர்களின் மனைவிகள் தங்களது கணவர்களின் ஆயுள் நீடிக்க ஜேஷ்டா பவுர்ணமி விழாவில் ஆலமரத்தில் கயிறு சுற்றி வழிபாடுகள் நடத்தினர்ஆண்டு தோறும் ஜூன் மாதத்தில் கர்நாடக மாநிலத்தில் ஜேஷ்ட பூர்ணிமா திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. திருமணமான பெண்கள்தங்கள் கணவர்களின் நலனுக்காக, ஆலமரத்தின் கீழ் விரதம் இருந்து சிறப்புச் சடங்குகளைச் செய்வது வழக்கம்.

இந்நாள் குடும்ப நீண்ட ஆயுள்,, மற்றும் விஷ்ணு பகவான், லட்சுமி தேவியை வழிபடுதல் ஆகியவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குன்னூர் ராணுவ முகாம் பகுதியில் உள்ள முருகன் கோவில் முன்புறம் இருக்கக்கூடிய ஆலமரத்தில் பெண்கள் சிறப்பு வழிபாடுகள் நடத்தி ராணுவத்தில் பணியாற்றும் தங்களின் கணவர்கள் ஆயுள் நீடிக்க மரத்தில் கயிறு சுற்றி வைத்து வழிபட்டனர்.

பின்பு நெற்றில் திலகமிட்டு சுமங்கலியாக இருக்கும் பூஜைகள் நடத்தப்பட்டது.

இதில் ஏராளமான ராணுவ வீரர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகள் திரளாக பங்கேற்றனர்.

## வெட்காளியம்மன் வேடம் அணிந்து

# பம்பை இசையுடன் ஆரவார நடனத்துடன் இருமுடி காணிக்கையுடன் நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்



எட்டையபுரம் ஜூலை 01.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளியம்மன்காளிபராசக்தி பீடத்தில் ஆனி மாத வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா மகாயாகம் நடைபெற்றது.வேள்வி விழா மகாயாக சாலையில் நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பழ வகைகள்,உணவு தானியங்கள், உடைகள்,குழந்தை தொட்டில், கல்உரல், அம்மி,மாங்கல்யம், உணவு ஆகியவற்றை நடைபெற்ற மகாயாகசாலையில் செலுத்தி வழிபாடு நடைபெற்றது.அதனைத் தொடர்ந்து 42 அடி உயரம் கொண்ட வெட்காளியம்மனுக்கு 108 லிட்டர் பாலாபிஷேகம்,மஞ்சள்அபிஷேகம்மற்றும்180கிலோ எலுமிச்சம் மாலை அணிவித்து சிறப்பு பூஜை மற்றும் தீபாராதனை நடைபெற்றது. ஆனி மாத இருமுடி விழாவிற்கு வருட வருடம் பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருவதால், 4வது கட்டமாக தர்மபுரி,சேலம்,நாமக்கல்,கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 1000க்கும் மேற்பட்ட விரதம் இருந்து காப்பு கட்டி இருமுடி கட்டியும் வெட்காளியம்மன் வேடம் அணிந்தும் வந்த பக்தர்கள் பம்பை வாத்தியத்துடன் ஆரவார நடனத்துடன் தங்களின் நேர்த்திக்கடனை செலுத்தினர்.



## கிருஷ்ணகிரியில்

# வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா

### மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் தர்மராஜ் நல திட்ட உதவிகளை வழங்கினார்

கிருஷ்ணகிரி ஜூலை1

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் உத்தரவின் பெயரில் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) பொ.தர்மராஜ் தலைமையில் வட்டாட்சியர் பெ. தா.ரமேஷ் முன்னிலையில் 1435 ஆம் ஆண்டு பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழாவில் அகசிபள்ளி, பெத்ததாளப்பள்ளி, கட்டிகானப்பள்ளி, பயனப்பள்ளி, கம்பம்பள்ளி, காட்டிநாயனப்பள்ளி, கோதிகுட்டலபள்ளி உள்ளிட்ட வருவாய் கிராமங்களுக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, ஜாதி சான்றிதழ், பட்டா மாற்றம், உட்பிரிவு பட்டா, மற்றும் இலவச வீட்டுமனை பட்டா, பட்டா ரத்து, ஆக்கிரமிப்பு அகற்றல், நில அபகரிப்பு, புதிய குடும்ப அட்டை, கிராம கணக்கில் மாற்றம், ஆகியவை தொடர்பான 978 மனுக்கள் பெறப்பட்டது. இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு உடனடி ஆணைகளை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவி பொ.தர்மராஜ் வழங்கினார். இதர துறைகள் சார்ந்த மனுக்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கணேசன், மண்டல துணை வட்டாட்சியர்கள் கிருஷ்ணகிரி மகேஸ்வரி, வேப்பனப்பள்ளி சகாதேவன், காவேரிப்பட்டினம் ஜெயபால், மற்றும் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும் பொதுமக்கள் தங்களுடைய குறைகளை மனுக்களாக வழங்கினார்கள். நிறைவு நாளான பொதுமக்களுக்கு அரசு நலத்திட்டங்கள் தகுதியின் அடிப்படையில் கிடைத்திட வழிவகை உடனடியாக செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் தர்மராஜ் அவர்கள் உத்தரவிட்டார்.

## பாலக்கோட்டில்

# தனியார் நிதி நிறுவனம் மற்றும் காவல் துறை இணைந்து பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி




தருமபுரி ஜூலை 01

தருமபுரிமாவட்டம் பாலக்கோடு தனியார் மண்டபத்தில் கிராமீன் கூட்டா இந்தியா பௌண்டேஷன் நிறுவனம் மற்றும் காவல் துறை இணைந்து பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்து பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் சி.ஏ.ஜி.எல் நிறுவன கிளை மேலாளர் ரஞ்சித்குமார் வரவேற்று பேசினார். கிராமீன் கூட்டா இந்தியா பௌண்டேஷன் நிறுவனத்தின் மண்டல மேலாளர் பசவராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பெண்கள் சமூகத்தில் பொருளாதார வளர்ச்சி பெற்றால் மட்டுமே அவர்களுக்கான முழுமையான வளர்ச்சியை அடைய முடியும். மேலும் பாலியல் சீண்டல்கள், அத்துமீறல்கள் குறித்து தைரியமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்க முன் வந்தால் பாலியல் குற்றங்கள் நடக்காது என்றும் மேலும் பெண்கள் கல்வி, வேலைவாய்ப்புக்களில் மேலும் மேலும் தங்களை வளர்த்து கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கினார். அதனை தொடர்ந்து தருமபுரி குற்ற பிரிவு இன்ஸ்பெக்டர் அருன் பேசும் போது குழந்தை திருமணங்களை அறவே தடுக்க வேண்டும் என்றும், டிஜிட்டல் பண பரிவர்த்தனைகள் மற்றும் ஆன்லைன் மோசடிகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பது குறித்தும், போக்சோ சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தீயணைப்பு நிலைய அலுவலர் மகேந்திரன் திடிர் தீ விபத்து, மின் விபத்து குறித்தும், ஆறுகளில், கிணறுகளில் தண்ணீரில் சிக்கி கொண்டவர்களை பாதுகாப்புடன் எவ்வாறு மீட்க வேண்டும் என்பன குறித்து பயிற்சி அளித்தார். இம்முகாமில் சப் இன்ஸ்பெக்டர் விஜயா, பகுதி மேலாளர்கள் குமரவேல், சிலம்பரசன்ராஜா, கிராமீன்கூட்டா இந்தியா பௌண்டேஷன் நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள், பெண்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கிளை மேலாளர் வெற்றிவேல் நன்றி கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள பார்கூர் உட்கோட்டம் நாகரசம்பட்டி காவல் சரகத்தில் உட்பட்ட கூரம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் பாலேகுளி அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழக காவல் துறையின் கிருஷ்ணகிரி மாவட்ட சிங்கப் பெண் காவல் உதவி ஆய்வாளர் .திருமதி சங்கீதா குழுவினர் பள்ளி மாணவி மாணவர்களுக்கு பாதுகாப்பு குறித்து போதை பொருள் குறித்தும் குழந்தைகளுக்கு ஏதேனும்பாதிப்புஏற்பட்டால்உடனடியாக1091என்றஎண்ணிற்குதகவல்தெரிவிக்குமாறு விழிப்புணர்வை ஏற்படுத்தினார் இதில் நாகரசம்பட்டி உழவு பிரிவு சிஜடி மூர்த்தி கலந்து கொண்டனர்

## தஞ்சாவூரில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



தஞ்சாவூர் ஜூலை 1

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன

மாவட்ட கலெக்டர் (பொறுப்பு) தியாக ராஜன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 543 மனுக்கள் வந்தன. இந்த மனுக்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு கலெக்டர் பொறுப்பு தியாக ராஜன் உத்தரவிட்டார்

மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 5 மாற்று திறனாளிகளுக்கு ரூபாய் 3,500 மதிப்பில் காதொலிக் கருவிகளும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 16 ஆயிரம் மதிப்பில் காமோடோ சக்கர நாற்காலியும் வழங்கப் பட்டன

இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் சௌமியா , மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ்சாலை பணி, பள்ளி மாணவர்கள் உயிருடன் விளையாட்டு: காவல்துறை வேடிக்கை!



திருவள்ளூர். ஜூலை 1

திருவள்ளூர் மாவட்டம். திருவள்ளூர் திருத்தணி செல்லும் தேசிய நெடுஞ் சாலை விரிவாக்கப் பணிக்காக, கடந்த சில மாத காலமாக ஆந்திர மாநிலம் மகா ராஜா மலைப்பகுதியில் இருந்து கிராவல் மண். அள்ளப்படுவதல் இரவு பகலாக கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த கனரக லாரிகள் அனைத்தும் கனகம்மாசத்திரம் பஜார் வீதி வழியாக செல்வதால், அங்கு அமைந்துள்ள அரசினர்

மேல்நிலைப்பளிமுன்புதினந்தோறும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பள்ளிக்கு வரும் 500க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள், EARTH MOVER, டிப்பர் லாரிகளுக்கு இடையே உயிரை பணயம் வைத்து பள்ளிக்குள் நுழையும்அவலநிலைஉள்ளது.அதிர்ச்சி தகவல் என்னவென்றால்ப ள்ளிக்கு அருகிலேயே காவல் நிலையம் இருந்தும், பள்ளி நேரத்தில் கனரக வாகனங்களை தடுக்கவோ, போக்குவரத்தை சீர் செய்யவோ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பெற்றோர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அதேசமயம். சாலை முழுவதும் மண், தூசி பறப்பதால் மாணவர்களுக்கு சுவாச கோளாறு ஏற்படும் அபாயமும் உள்ளது. பெற்றோர்கள் கோரிக்கை:

1. பள்ளி நேரமான காலை 8 முதல் 9.30 மணி, மாலை 3.30 முதல் 5 மணி வரைகனரக வாகனங்களைதடை செய்ய வேண்டும். 2. மாற்று வழியில் லாரிகளை திருப்பி விட வேண்டும். 3. பள்ளி முன்பு காவலர் நியமித்து மாணவர்களை பாதுகாப்பாக அனுப்ப வேண்டு ம். மாவட்ட ஆட்சியர், நெடு ஞ்சாலைத் துறை அதிகாரிகள் உடனடி யாக தலையிட்டு, குழந்தைகளின் உயிருடன் விளையாடும் இந்த அவலத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என பெற்றோர்கள்.பொது மக்கள். சமூக ஆர்வலர்கள். கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அவிநாசி வ உ சி பூங்காவில் தேங்கியிருந்த குப்பைகளை தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தினர் சுத்தப்படுத்தினர்

திருப்பூர், ஜூலை 1

திருப்பூர் புறநகர் மாவட்டம் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் அவிநாசி ஒன்றிய குழு சார்பில் அவிநாசி நகரில் உள்ள வ.உ.சி பூங்காவில் தேங்கி கிடந்த குப்பைகளை நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தோழர்களின் ஒத்துழைப்போடு சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் தோழர் எஸ் தெய்வசிகாமணி அவிநாசி ஒன்றிய செயலாளர் தோழர் பி. ராஜேந்திரன் அவிநாசி ஒன்றிய தலைவர் தோழர்.எஸ் ஷேக்ஸ்பியர் ஒன்றிய குழு உறுப்பினர்கள் தோழர் சக்திவேல்,பன்னீர்செல்வம் அவிநாசி நகர கிளை தலைவர் தோழர் பிரபாகரன் கிளை செயலாளர் தோழர் யுவராஜ் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்

# கொடைக்கானலில் சாபத்தில் தள்ளப்பட்ட கிராம மக்கள் குளிருக்கு போர்வை போர்த்தி தூங்கும் அதிகாரிகள்





திண்டுக்கல், ஜூலை 1

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வில்பட்டி ஊராட்சி பகுதியில் உப்புப்பாறை என்ற கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு சாலை வசதி கூட இல்லாமல் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்கள் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று வந்த நிலையில் பல்வேறு போராட்டங்களுக்கு பின்னர் புதிய சாலை அமைத்து அதனை கிராம ஊராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 6 ஆண்டுகளாக இந்த கிராமத்தின் சாலை மிகவும் மோசமாக

பழுதடைந்து இருந்ததை தொடர்ந்து அப்பகுதி கிராம மக்கள் சாலையை சீரமைக்க கோரி தொடர்ந்து தமிழக அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்தனர். அதனை தொடர்ந்து 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி மாநில சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2.35 கோடி மதிப்பீட்டில் கிராம சாலையை சீரமைக்க ஒப்பந்தம் விடப்பட்ட நிலையில் கடந்த 6 மாதங்களாக சாலை சீரமைக்கும் பணியானது பாதியுடன் நிறுத்தப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளது .

சாலை மிகவும் மோசமாக பழுதடைந்து உள்ளதால் இருசக்கர வாகனத்தில் பயணிப்பவர்கள் அடிக்கடி விழுந்து காயங்கள் ஏற்படுவதோடு பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதனால் திமுக ஆட்சியில் ஒப்பந்தம் விடப்பட்ட சாலை பணியை தவேக ஆட்சியில் போட மறுக்கின்றனரா? அல்லது சாலை சீரமைக்க ஒதுக்கப்பட்ட 2.35 கோடி ரூபாய் பணத்தை பொதுக்கமக்களின் கண்களை கட்டி விட்டு வேறு பணிக்கு பயன்படுத்த பட்டார்களா? அல்லது வேறு ஏதாவது காரணத்தால் இந்த கிராம மக்களை அதிகாரிகள் பழிவாங்குகிறார்களா ? என்றெல்லாம் அப்பகுதி பொதுமக்கள் கேள்வி எழுப்புவதோடு, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் ஒன்றிய பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அப்பகுதி பொதுமக்களுக்கு சரியான விளக்கம் அளிக்க மறுப்பதாக குற்றம் சாட்டுகின்றனர் .மேலும் அப்பகுதி கிராம மக்களை சாபத்தில் தள்ளப்பட்டது போல் அரசு சார்ந்த பணிகளை செயல்படுத்த தொடர்ந்து மெத்தனம் காட்டுவதாக அப்பகுதி பொதுமக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர் . இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கவனத்தில் கொண்டு விரைந்து சாலைப் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர்

# அமைச்சரை பதவி விலகக்கோரி திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



திருப்பூர், ஜூலை 1

திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் தாராபுரம் அண்ணா சிலை அருகில் பொது இடத்தில் போதை பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட த வெ க அமைச்சர் சரத்குமார் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் இல. பத்மநாபன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சர் திமுக துணை பொது செயலாளர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர் இதை அடுத்து காவல் துறையால் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

# தாராபுரத்தில் திமுக சார்பில் அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்



திருப்பூர், ஜுலை 1

திருப்பூர்மாவட்டம்தாராபுரத்தில் நகர திமுக சார்பில் தமிழக அமைச்சர் சரத்குமார் பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியது போன்று வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானதாக கூறப்படும் விவகாரத்தை கண்டித்தும். அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தினர். தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசை கண்டித்தும் தாராபுரம் அண்ணா சிலை முன்பு திங்கள் கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திமுக நிர்வாகிகள் தலைமை வகித்தனர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மு. பே. சாமிநாதன், முன்னாள் அமைச்சர் திருமதி கயல் விழி செல்வராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் இல. பத்மநாபன், ஒன்றிய செயலாளர் SVS செந்தில் குமார், தாராபுரம் நகர செயலாளர் முருகானந்தம், நகரமன்ற தலைவர் கு. பாப்பு கண்ணன், ஆதிதிராவிடர் நலக்குழு ஒருங்கிணைப்பாளர் க. வி. சிவசங்கர், இயக்குனர் மற்றும் திறன் மேம்பாட்டு பேச்சாளர் Dr. புகழ், திமுக நகர நிர்வாகிகள், திமுக மகளிர் அணி நிர்வாகிகள் என பெருந்திரளாக போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவி விலக வேண்டும் என்றும் தமிழக அரசு இதுகுறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழக்கங்களை எழுப்பி அரசுக்கு எதிராக கடும் கண்டனத்தை தெரிவித்தனர். இதனால் அண்ணா சிலை பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

போராட்டம் தீவிரமடைந்ததை தொடர்ந்து தாராபுரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிவக்குமார் தலைமையிலும் காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் அவர்களின் மேற்பார்வையில் நூற்றுக்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் அனுமதி இன்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக கூறி முன்னாள் அமைச்சர் மு. பே. சாமிநாதன், முன்னாள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களையும் தாராபுரம் போலீசார் குண்டு கட்டாக தூக்கிச் சென்று காவல் துறை வாகனத்தில் ஏற்றினர். அவர்களை தாராபுரம் புறவழிச்சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் தற்காலிகமாக தங்க வைத்து காவலில் வைத்தனர். அதைத் தொடர்ந்து அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதுடன் தாராபுரம் பகுதி முழுவதும் பெரும் பரபரப்புடன் காணப்பட்டது.

# ஆபத்தான நிலையில் நீர் தேக்க தொட்டி



திருப்பத்தூர்:ஜூலை:1

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த மாடப்பள்ளி கிராமம் அண்ணா நகரில் நீர் தேக்க தொட்டி பழுந்தடைந்துள்ளது. சீரமைக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் பல முறை கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லை என புகார். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வார்களா? என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# திருச்சி பெண் காவலர் சாவில் மர்மம் கலெக்டரிடம் மனு



திருச்சி, ஜூலை 1

திருச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வந்த அப்துல்லா பிவி, உடல்நலக் குறைவால் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்த நிலையில், அவரது மரணம் குறித்த தகவல் குடும்பத்தினருக்குக் கிடைக்கவில்லை என்றும், அவரது சொத்துக்களை அடைய கணவர் முயற்சிப்பதாகவும் உயிரிழந்த பெண் காவலரின் சகோதரி ரம்ஜான் பேகம் குற்றம் சாட்டியுள்ளார். எனவே, அவரது உடலை உடற்கூறு ஆய்வு செய்து நீதி வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# மணப்பாறை பெண்ணிடம் ரூ.22 லட்சம் மோசடி.. அடகு கடைக்காரர் கைது

மணப்பாறை, ஜூலை 1



மணப்பாறை மதுரைரோடு பகுதியில் வசிக்கும் மகாலட்சுமி என்பவரிடம், அவரது வீட்டருகே வசிக்கும் பிரேம்குமார் என்பவர், தான் நடத்திவரும்அடகுகடையில் பார்ட்னராக சேர்த்துக் கொள்வதாகக் கூறி 22 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்த நிலையில், இது குறித்து மகாலட்சுமி மணப்பாறை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் பிரேம்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மாரண்டஅள்ளி அருகே

# மது பாட்டில்களை பதுக்கி விற்றவர் கைது

தருமபுரி ஜூலை 01

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி அருகே அமானி மல்லாபுரத்தில் உள்ள பெட்டிக்கடையில் இளங்கோ (வயது 55) சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்று வந்தார். இது குறித்து தகவலறிந்த மாரண்ட அள்ளி காவல்துறையினர் அப்பகுதியில் சோதனை நடத்தினர். அப்போது கடையில் 56 மதுபாட்டில்கள் சிக்கின. இதையடுத்து அரசு மதுபானங்களை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக கடை உரிமையாளர் இளங்கோவை காவல்துறையினர் கைது செய்தனர்.

## தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் தில்

# முதல் துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியன் நினைவேந்தல் நிகழ்வு



தஞ்சாவூர் ஜூலை 1

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் தில் முதல் துணை வேந்தர் வ . அய். சுப்பிரமணியத்தின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடை பெற்றது பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வ. அய்.சுப்ரமணியம் நினைவிடத்தில் துணைவேந்தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமையில், பதிவாளர் பொறுப்பு பன்னீர் செல்வம் முன்னிலையில் மாலை அணிவித்து, மலர்த் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

இந்நிகழ்ச்சியில் மொழி பெயர் ப்பு துறைத் தலைவரும், மக்கள் தொடர்பு அலுவலருமான பொறுப்பு முருகன் ,சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை தலைவர் கவிதா ,தூய்மை பிரிவு மேற்பார்யாளர் சுகுமாரன்,பல்கலைக்கழக தலைமை காவலர் பொறுப்பு வேலுசாமி, தோட்ட பிரிவு மேற்பார்வையாளர் சேவியராஜ், அலுவலக நிலைப்பணியாளர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.